**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.128/2015**
**Prosecution Witness :2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சரத்குமார் | **Caste** | : |
| **Father's Name** | : வரதராஜன் | **Calling** | : சார்பு ஆய்வாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : **35/2026** |
| | | **Dated** | : **09.03.2026** |

**09.03.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கூடுதல் சாட்சி **திரு. சரத்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2ம் எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அலுவலர் சார்பு ஆய்வாளர் பக்தவச்சலம் பதவி உயர்வு பெற்று வெளி மாவட்டம் சென்றுவிட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் அவரின் கையெழுத்து, கையொப்பம் நன்கு பரிட்சயம் என்பதால் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 14.12.2014ம் தேதி சார்பு ஆய்வாளர் பக்தவச்சலம் நிலைய பொறுப்பில் இருந்தபோது சென்னை , வளசரவாக்கம் ருக்மணி கோவில் தெரு, நம்பியார் பிள்ளை மகன் ஆவுடைநாயகம் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மற்றும் சி.டி ஒன்று உடன் ஆஜர் செய்த புகாரைப்பெற்று

நிலைய குற்ற எண்.778/2014 சட்டப்பிரிவுகள் 52(A), R/W 68(A) Copy Right Act மற்றும் 506(1) இதச வாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். சி.டி ஒன்றை அத்தாட்சி தயார் செய்து பெற்றுள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கின் சார்பு ஆய்வாளர் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.30 மணிக்கு திண்டுக்கல் சரவணபவன் ே ஹாட்டல் எதிரே கண்காணிப்பில் ஈடுபட்டபோது இரண்டு நபர் கையில் பையுடன் இருந்தவரை விசாரிக்க அவர் சுயலாபத்திற்காக புதுப்பட சி.டி கள் விற்பதாக தெரிவித்தார். அதனால் அவரை காரணம் கூறி கைது செய்து அவரிடம் இருந்த புதுப்பட சி.டி களை சாட்சிகள் பழனியப்பன், கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வம், தங்கவேல் ஆகியோர் முன்னிலையில் சம்வ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் , பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகள் ஆவுடையநாயகம், சீனிவாசபாபு ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். எதிரி மற்றும் வழக்குச்சொத்துகளுடன் நிலையம் வந்து பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். வழக்குச்சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR. 5/2015 பதிவு செய்துள்ளார். பின்பு தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 52(A), R/W 68(A) Copy Right Act மற்றும் 506(1) இதசவாக குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் அத்தாட்சி அ.சா.ஆ.5 ஆகவும் படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும் புதுப்பட சீடிக்கள் 12 எண்ணிக்கைகள் சா.பொ.1 ஆகவும் வாதி ஒப்படைத்த சீடி யை அத்தாட்சியில் கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகவும் புகார் அ.சா.ஆ.8 ஆகவும் வாதி ஒப்படைத்த சீடி சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொல்வது போல் அ.சா.1 புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் அவரிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு வழக்கிற்கு ஏற்றாற்போல் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும் அவர்களிடமிருந்து எந்தவித வழக்குச்சொத்துகளை கைப்பப்பப்படவில்லை என்றாலும் சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்துகள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் எதிரி மீது தவறாக

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புள்ளியியல் கணக்கிற்காக எதிரி மீது தவறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.09 13:51:15 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.128/2015**
**Prosecution Witness :1**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : பழனியப்பன் | **Caste** | : | |
| **Father's Name** | : சிங்காரம் | **Calling** | : | தனியார் துறை |
| **Village** | : விஸ்வநாதபுரம் | **Religion** | : | |
| **Taluk** | : மதுரை | **Age** | : | **36/2026** |
| | | **Dated** | : | **09.03.2026** |

**09.03.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 4 **திரு. பழனியப்பன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2ம் எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

நான் மதுரை விஸ்வநாதபுரத்தில் குடியிருந்து தனியார் விளம்பர தொழில் செய்துவருகிறேன். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை திண்டுக்கலில் உள்ள எனது சித்தப்பா வீட்டிற்கு வந்துவிட்டு மீண்டும் மதுரை செல்வதற்காக திண்டுக்கல் பேருந்துநிறுத்திற்கு வந்தபோது போலிசார் புதுப்பட சி.டிகள் விற்பனை செய்ததற்காக ஒருவரை கைது செய்ததாகவும் அதற்காக அத்தாட்சியில் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. **அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். எழுதாத வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கைப்பற்றி எனக்கு ஏதும் தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.09 13:51:20 +0530

Judicial Magistrate No.II
Dindigul.